# தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம்

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் இந்தியாவின் விவசாய ஆராய்ச்சி, கல்வி மற்றும் விரிவாக்கத்தில் ஒரு தலைசிறந்த மையமாக விளங்குகிறது. இப்பல்கலைக்கழகம் நீர்வள நிலவளத் திட்டத்தில் ஒரு முக்கிய அங்கத்தினை வகிக்கிறது. மேலும் நீர்வள நிலவளத் திட்டத்தில் இப்பல்கலைக்கழகத்தை சார்ந்த கல்லூரிகள் மற்றும் ஆராய்ச்சி மையங்கள் மூலமாகவும் வேளாண்மை அறிவியல் நிலையங்கள் வாயிலாகவும் பல்வேறு முயற்சிகள் செயல்படுத்தப்படுகிறது. இயக்குநர், நீர்நுட்ப மையம், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் ஒருங்கினைப்பு அலுவலராக இத்திட்டத்தில் செயல்படுகிறார்.

## இத்திட்டத்தின்கீழ், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் குறிக்கோட்கள்

செம்மை நெல் சாகுபடி போன்ற உத்திகளை மிகப்பெரிய அளவில் பர ப்புதல், கரும்பு, தென்னை, மரவள்ளி போன்ற பயிர்களில் உற்பத்தி திறனை மேம்படுத்த சொட்டு நீர் பாசன வசதிகளை புகுத்துதல்.

விலை மதிப்பீடு மற்றும் சந்தை நுண்ணறிவு பற்றிய தகவல்களை அளிப்பதன் மூலம் சந்தை தொடர்பினை மேம்படுத்துதல்.

- மக்காசோளம், பயிர் பரவலாக்கத் திட்டத்தின் வாயிலாக பயறுவகைகள் மற்றும் சூரியகாந்தி ஆகியவற்றின் சாகுபடி பரப்பினை உயர்த்துதல்.
- தரமான விதைகள் உற்பத்தி மற்றும் வழங்குதலுக்காக மாதிரி விதை கிராம திட்டத்தினை செயல்படுத்துதல்.
- உரிய பயிற்சி அளிப்பதன் வாயிலாக மற்றும் அதை சார்ந்தவர்களுக்கு திறன் மேம்பாடு அடைய செய்தல்.

## உபவடி நிலங்களில் விவசாயத்தை பாதிக்கும் அம்சங்கள்

- தானிய உற்பத்தி திறனில் காணப்படும் மந்த நிலை.
- தமிழ் நாட்டில் உள்ள பல வேளாண் மண்டலங்களில் செம்மை நெல் சாகுபடியி னை உரிய முறையில் கடைப்பிடிக்காமல் இருத்தல்.
- வாழை, தென்னை மற்றும் கரும்பில் நுண்நீர் பாசன அமைப்புகளை உரிய முறையில் அமைக்காமல் இருத்தல்.
- மிக குறைந்த அளவு பயிர் பரவலாக்கம்.

- வேளாண் பணிகளுக்கு உரிய பணியாளர்கள் குறித்த நேரத்தில் கிடைக்காமல் இருத்தல்.
- முக்கிய பயிர்களுக்கான தரமான விதைகள் கிடைக்காமல் இருத்தல்.
- சரியான சந்தை மற்றும் நடப்பு விலைகளுக்கான உரிய தகவல்கள் கிடைக்காமல் இருத்தல்.

## செயல்பாடுகள்

மேற்கூறிய குறிக்கோள்களை அடையவும், உபவடி நிலப் பகுதிகளில் காணப்படும் விவசாயம் சார்ந்த பிரச்சினைகளை களையவும், பின்வரும் செயல்பாடுகளை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கழைக்கழகம் நடத்த திட்டமிட்டுள்ளது.

- பழங்கள் மற்றும் காய்கறி பயிர்களில் துல்லிய வேளாண் உத்திகளை புகுத்துதல்.
- குறைந்த நீர் மற்றும் அதிக அளவு சந்தை வாய்ப்பினை நல்கும் பரவலாக்கப் பயிர் சாகுபடியினை உயர்த்துதல்.
- செம்மை நெல் சாகுபடி செயல் விளக்க தளைகள் அமைத்தல்.
- கரும்பு, வாழை மற்றும் தென்னையில் நுண் நீர் பாசனம்.
- சந்தை மற்றும் விலை முன்னறிவிப்பு தகவல்கள் பெற பண்னை ஆலோசனை மற்றும் வேளாண் வணிக மையங்கள்.
- தரமான விதை மற்றும் வீரிய ஒட்டு விதைகள் உற்பத்தி செய்ய மாதிரி விதை கிராமங்கள் அமைத்தல்.

## செம்மை நெல் சாகுபடி

தற்போது வழக்கத்தில் உள்ள நெல் சாகுபடி முறைக்கான ஒரு சிறந்த மாற்றாக செம்மை நெல் சாகுபடி முறை விளங்குகிறது. தற்போது நிலவும் நீர் பற்றாக்குறை, வளங்களின் கூடுதல் பயன்பாடு மற்றும் சுற்றுச்சூழல் மாசுப்படுதல் ஆகிய பிரச்சினைகளுக்கான ஒரு உரிய தீர்வாகவும் செம்மை நெல் சாகுபடி முறை அமைந்துள்ளது. செம்மை நெல் சாகுப டி குறித்த அறிமுக பயிற்சி சுற்றுலா, வயல்களில் கொடியிடுதல், தூர் எண்ணிக்கை விழா மற்றும் அறுவடை விழா ஆகியவற்றை நடத்துதல் மூலம் இம்முறை விவசாயிகளிடையே பிரபலப்படுத்தப்படுகிறது. பல்கலைக்கழகத்தின் சீரீய முயற்சியால் 1299 எக்டர் பரப்பளவில் செம்மை நெல் சாகுபடி தளைகள் வெற்றிகரமாக நடத்தப்பட்டு, அதன் வாயிலாக 2380 எக்டர் பரப்பளவிற்கு முதல் ஆண்டு திட்ட உபவடி நிலப்பகுதிகளில் இம்முறை பரவியது. இரண்டாம் ஆண்டு திட்ட பகுதிகளில் 2581 எக்டர் பரப்பளவில் செம்மை நெல் சாகுபடி தளைகள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

## எண்ணெய் வித்து பயிர்களில் உயர் சாகுபடி தொழில்நுட்பங்கள் - நிலக்கடலை, எள், சூரியகாந்தி மற்றும் ஆமணக்கு

நிலக்கடலை பயிரானது தமிழகத்தின் முக்கிய எண்ணெய்வித்து பயிராகும். எனவே முதலாம் ஆண்டு உபவடி நிலத்திட்டத்தில் உயர் முக்கியத்துவம் அளிக்கப்பட்டு செயல் விளக்கத்தளைகள் 337 எக்டர் பரப்பில் அமைக்கப்பட்டது. இதன் மூலம் 1252 எக்டர் பரப்பிற்கு இந்த உயர் சாகுபடி தொழில் நுட்ப நிலக்கடலை விவசாயம் பரவியது. இரண்டாம் ஆண்டு திட்டத்தில் நிலக்கடலை உயர் விளைச்சல் செயல் விளக்கத் தளைகள் 520 எக்டரில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. வறட்சிக்கு இலக்காகும் நம் தமிழகத்திற்கு சூ ரியகாந்தி ஒரு மிக சிறந்த எண்ணெய் வித்து பயிராகும். இப்பயிரின் நீர் தேவை சுமார் 400மி.மீ மட்டுமே ஆகும். எனவே இப்பயிரினை பிரபலப்படுத்த சூரியகாந்தி உயர் விளைச்சல் தளைகள் 35 எக்டரில் அமைக்கப்படுகிறது. இதன் பரவலாக்கம் 100 எக்டரில் அறியப்பட்டது. இரண்டாம் ஆண்டு திட்டத்தில் 149 எக்டரில் சூரியகாந்தி உயர் விளைச்சல் தளைகள் அமைக்கப்படவுள்ளது. எள் பயிரை பொருத்த வரையில் முதலாம் ஆண்டு 46 எக்டரில் உயர் விளைச்சல் செயல் விளக்கத் தளைகள் வெற்றிகரமாக நடத்தப்பட்டது. இரண்டாம் ஆண்டு 54 எக்டரில் அமைக்கப்பட திட்டமிடப்பட்டுள்ளது. நமது தமிழகத்தில் நிலவும் தட்பவெட்ப சூழலானது ஆமணக்கு பயிருக்கு மிகவும் உகந்ததாக அமைந்துள்ளது. இதன் பொருட்டு நீர்வள நிலவளத் திட்டத்தில் ஆமணக்கு வீரிய ஒட்டு (TMVCH 1) உயர் விளைச்சல் செயல் விளக்கத் தளைகள் 75 எக்டரில் அமைக்கப்பட்டது. பயிரின் வளர்ச்சி மிகவும் நன்றாக இருந்தமையால் விவசாயிகள் தாங்களாகவே 205 எக்டரில் இப்பயிரினை பரவலாக்கம் செய்திட்டனர். தனியார் துறை மருந்து விற்பனையாளர்களிடம் விற்பனைக்கான தொடர்பு பெற பல்கலைக்கழகத்தின் வாயிலாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## மக்காச்சோளம் சாகுபடியில் உயர் விளைச்சல் தொழில் நுட்பங்கள்

திட்ட உபவடி நிலப் பகுதி வேளாண்மையில் மக்காச் சோளம் ஒரு முக்கிய பயிராகும். 398 எக்டரில் வெற்றிகரமாக நடத்தப்பட்ட உயர் விளைச்சல் செயல் விளக்கத் தளைகளின் பயனனக இச்சாகுபடி முறை 1795 எக்டருக்கு பரவியது. இரண்டாம் கட்டமாக 452 எக்டரில் உயர் விளைச்சல் மக்காச்சோள செயல் விளக்கத் தளைகள் அமைக்கப்படவுள்ளன. பாலாறு மற்றும் மேல் வெள்ளாறு உபவடி நிலப் பகுதி விவசாயிகளின் நலன் கருதி சுகுணா கோழித் தீவன நிறுவனத்தாரிடம் சந்தை தொடர்பு ஏற்படுத்தப்படுத்தப்பட்டுள்ளது.

## பயறுவகைப்  பயிர்களில் உயர் விளைச்சல் தொழில் நுட்பங்கள்

பயறுவகைப் பயிர்களைப் பொருத்தவரை தமிழ்நாடு ஒரு பற்றாக்குறை நிலவும் மாநிலமாக உள்ளது. இப்பயிர்களின் வரத்து இதன் தேவையைவிட மிகக்குறைவாகவே உள்ளதால் பிற மாநிலங்களில் இருந்து தருவிக்கப்படுகிறது. இப்பிரச்சனையின் தீவிரத்தினைக் கருத்தில் கொண்டு நீர்வள நிலவளத் திட்டத்தில் இப்பயிருக்கு முக்கியத்துவம் அளிக்கப் பட்டு வருகிறது. முதல் கட்டமாக 152 எக்டரில் உயர் விளைச்சல் செயல் விளக்கத் தளைகள் அமைக்கப்பட்டது. இரண்டாம் கட்டமாக 713 எக்டரில் உயர் விளைச்சல் செயல் விளக்கத் தளைகள் அமைக்கப்படவுள்ளன. மேலும் நெல் தரிசு பயறு வகைப் பயிறுகளுக்கு உயர் முக்கியதுவம் அளிக்கப்பட்டு முதல் கட்டமாக 695 எக்டரில் உயர் விளைச்சல் செயல் விளக்கத் தளைகள் அமைக்கப்பட்டன. இரண்டாம் கட்டமாக 2581 எக்டரில் பயறு வகைப் பயிறுகள் உயர் விளைச்சல் செயல் விளக்கத் தளைகள் அமைக்கப்படவுள்ளன.

## பருத்தி சாகுபடியில் உயர் விளைச்சல் தொழில் நுட்பங்கள்

பருத்தி நமது தமிழகத்தின் முக்கிய வாணிப பயிரா கும். முதல் கட்டமாக 120 எக்டரில் பருத்தி உயர் விளைச்சல் செயல் விளக்கத் தளைகள் அமைக்கப்பட்டன. இரண்டாம் கட்டமாக 160 எக்டரில் பருத்தி உயர் விளைச்சல் செயல் விளக்கத் தளைகள் அமைக்கப்படவுள்ளன.

## துல்லிய பண்ணைய முறைகள்

முதல் கட்டமாக 198 எக்டரில் கரும்பும், 10 எக்டரில் வாழையும், 100 எக்டரில் மரவள்ளியும், 600 எக்டரில் தென்னையும் மற்றும் 20 எக் டரில் காய்கறி பயிர்களும் துல்லிய பண்ணைய முறையின் கீழ் கொண்டு வர திட்டமிடப்பட்டது. இரண்டாம் கட்டமாக 237 எக்டரில் கரும்பும், 65 எக்டரில் வாழையும், 50 எக்டரில் மரவள்ளியும், 1050 எக்டரில் தென்னையும், 200 எக்டரில் காய்கறி பயிர்களும், 10 எக்டரில் பூக்களும் மற்றும் 5 எக்டரில் குடமிளகாய் பயிர்கும் துல்லிய பண்ணைய முறையின் நன்மைகளை விரிவுபடுத்தத் திட்டமிடப்பட்டது.

## தென்னையில் ஊடு பயிராக கோகோ சாகுபடி

தமிழகத்தின் உணவு எண்ணெய் தேவையில் தென்னை ஒரு முக்கிய இடத்தினை வகிக்கிறது. பண்ணையின் வருவாயினை உயர்த்த தென்னை சாகுபடியில் கோகோ பயிரினை ஊடு பயிராக புகுத்த திட்டமிடப்பட்டது. முதல் கட்டமாக 100 எக்டரில் செயல்படுத்தப்பட்ட இச்சாகுபடி முறை, இரண்டாம் கட்டமாக 500 எக்டரிலும் இப்பயன்மிகு முறை விரிவாக்கப்படவுள்ளது. பொள்ளாச்சியில் உள்ள காட்பரி இந்தியா நிறுவனத்திடம் சந்தை தொடர்பு ஏற்பட முயற்சிகள் மேற்கோள்ளப்பட்டு வருகிறது.

## சவுக்கில் குழி பிறை வடிவ சாகுபடி முறை

சவுக்கு வெளிமண்டலத்தில் உள்ள நைட்ரஜன் வாயுவினை நிலத்தில் நிலை நிறுத்தும் பயிராகும். மேலும் இப்பயிர் ஊட்டச்சத்து குறைபாடு நிலங்களிலும் நீர் தட்டுப்பாடு மிக்க இடங்களிலும் பயிரிட உகந்ததாகும். தமிழ்நா டு வேளாண்மைப் பல்கலைக்கழகம் அறிமுகப்படுத்தி உள்ள குழி பிறை வடிவ சவுக்கு சாகுபடி முறையின் முக்கிய குறிக்கோள், நீர் வளப் பாதுகாப்பு ஆகும். மேலும் இதன் மூலம் ஆரம்ப கட்ட நாற்று இறப்பினை குறைக்கலாம். இம்முறையில் வழக்கமான நடவு முறையை விட மிகக் குறைந்த அளவு நாற்றுகளே தேவைப்படுகின்றன. முதல் கட்டமாக பாம்பார் உபவடி நிலப் பகுதியில் 63 எக்டரில் சவுக்கு குழி பிறை வடிவ சாகுபடி முறை செயல் விளக்கத் தளைகள் அமைக்கப்பட்டது. இரண்டாம் கட்டமாக 40 எக்டரில் அமைக்கப்பட திட்டமிடப்பட்டுள்ளது. புதுக்கோட்டையில் உள்ள கிரீன்கேர் நிறுவனத்திடமும் தமிழ்நாடு காகித நிறுவனத்திடமும் சந்தை தொடர்பு ஏற்படுத்திட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## முள்ளில்லா மூங்கில் சாகுபடி

ஒரு பண்ணைத் திட்டத்தில் உயர் மதிப்பு பயிர்களை புகுத்துவதால் உயர் வருவாய் கிடைக்கும் என்பது கண்கூடு. எனவே தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் முதல் கட்டமாக வராகநதி உபவடி நில பகுதியில் உள்ள மாத்துார் திருக்கை கிராமத்தில் 20 எக்டர் பரப்பில் முள்ளில்லா மூங்கில் சாகுபடி செயல் விளக்கத் தளையினை அமைத்தது. இப்பயிரின் வளர்ச்சி பிரமிக்க தகுந்த வகையில் இருந்ததால் விவசாயிகள் மேலும் 20 எக்டரில் இப்பயிரினை பயிரிட்டனர். இரண்டாம் கட்டமாக 70 எக்டர் பரப்பில் முள்ளில்லா மூங்கில் சாகுபடி செயல் விளக்கத் தளைகள் அமைக்கப்படவுள்ளன.

## மாதிரி கிராமம்

மாதிரி கிராமக் கோட்பாடின்படி முக்கிய பயிர்களில் உயர் தர விதை உற்பத்தி, அங்கக பண்ணைய செயல் விளக்கம் மற்றும் விவசாயிகளின் திறன் மேம்பாடு ஆகியவற்றுக்கு உயர் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுவருகிறது. முதல் கட்டமாக 180 எக்டரி ல் செயல் விளக்கங்கள் அமைக்கப்பட்டன. மேலும் இரண்டாம் கட்டமாக 200 எக்டரில் செயல் விளக்கங்கள் அமைக்கப்படவுள்ளன.

## திட்ட அமுலாக்க மையங்கள்

### முதல் கட்டம்

| உபவடிநிலம் | தமிழ்நாடு வேளாண் பல்கலை கழகம் மையம் |
|---|---|
| வராகநதி | எண்ணெய் வித்துக்ள் ஆராய்ச்சி நிலையம் , திண்டிவனம் –604 001,<br>தொலைபேசி– 04147–250293, மின் அஞ்சல்: arstvm@tnau.ac.in |
| தெற்கு வெள்ளார் | வேளாண்மை அறிவியல் நிலையம் , வம்பன் காலனி, புதுக்கோட்டை –622 303,<br>தொலைபேசி– 0433–290321 |
| பாம்பார் | தேசிய பயறு ஆராய்ச்சி நிலையம், வம்பன், புதுக்கோட்டை –622 303,<br>தொலைபேசி– 0433–291408, மின் அஞ்சல்: kvkvamban@tnau.ac.in |
| மேல் வெள்ளார் | மரவள்ளி மற்றும் ஆமணக்கு ஆராய்ச்சி நிலைய ம், யத்தாபூர் –636 119,<br>தொலைபேசி– 04282–221901 |
| கோட்டகரையார் | வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரை –625 104.<br>தொலைபேசி– 0452–2422956 Ex –216 |
| மணிமுத்தாறு | வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரை –625 104.<br>தொலைபேசி– 0452–2422956 Ex –216 |
| ஆழியார் | தென்னை ஆராய்ச்சி நிலையம், ஆழியார்நகர் –642 101,<br>தொலைபேசி– 04253–288722, மின் அஞ்சல்: arsaliar@tnau.ac.in |
| பாலாறு | தென்னை ஆராய்ச்சி நிலையம், ஆழியார்நகர் –642 101,<br>தொலைபேசி– 0422–6611278 |
| அர்ஜுனாநதி | பருதி ஆராய்ச்சி நிலையம், ஸ்ரீவெல்லிப்புத்தூர் –626 125,<br>தொலைபேசி– 04563–260736 |
| | |
| இரண்டாம் கட்டம் | |
| | |
| பென்னையார் (கிருஷ்ணகிரி வரை) | மண்டல ஆராய்ச்சி நிலையம், பையூர் –635 806,<br>தொலைபேசி– 04343–250043, மின் அஞ்சல்: arspaiyur@tnau.ac.in |
| சுவேதாநதி | வேளாண்மை அறிவியல் நிலையம் , சண்டியூர் –636 203,<br>தொலைபேசி– 0427–2422550 |
| ஆனைவாரி ஓடை | வேளாண்மை பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், குமுலூர் –621712, திருச்சி,<br>தொலைபேசி–0431–2541281, மின் அஞ்சல்: deancaekum@tnau.ac.in |
| சின்னாறு | வேளாண்மை பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், குமுலூர் –621712, திருச்சி,<br>தொலைபேசி–0431–2541281, மின் அஞ்சல்: deancaekum@tnau.ac.in |

| | |
|---|---|
| அக்னியார் | தென்னை ஆராய்ச்சி நிலையம், வேப்பம்குளம், நாட்டுச லை–614 906,<br>தொலைபேசி– 04373–260205 |
| அம்புலியார் | வேளாண் ஆராய்ச்சி நிலையம், நாடிமுத்து நகர், பட்டுகோட்டை –641 602,<br>தொலைபேசி–04373–235832, மின் அஞ்சல்: arspattu@tnau.ac.in |
| மேல் வைகை மற்றும் வரட்டார் நாகலார் | தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், பெரியகுளம் –625 604,<br>தொலைபேசி–04546–231726, மின் அஞ்சல்: deanhortpkm@tnau.ac.in |
| மேல் குண்டாறு | மண்டலஆராய்ச்சி நிலையம், கோவிலளம்குளம், அருப்புகோட்டை –626 101<br>தொலைபேசி–04566–220562, மின் அஞ்சல்: arsapk@tnau.ac.in |
| தெற்காறு | வேளாண்மை அறிவியல் நிலையம் , வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரை–625 104,<br>தொலைபேசி– 0452–2422955. |
| நிஷபநிதி | வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், கிள்ளிகுளம் –628 252 |
| கலிங்கலார் மற்றும் சிந்தபள்ளிஉப்போடை | வேளாண் ஆராய்ச்சி நிலையம், கோவில் பட்டி–628 501<br>தொலைபேசி–04632–220533, மின் அஞ்சல்: arskovilpatti@tnau.ac.in |
| செங்கோட்டையார் | மண்டல ஆராய்ச்சி நிலையம், கோவிலங்குளம், அருப்புகோட்டை –626 101<br>தொலைபேசி–04566–220562, மின் அஞ்சல்: arsapk@tnau.ac.in |

மேலும் விவரங்களுக்கு அணுக வேண்டிய முகவரி :

இயக்குனர் மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர்
நீர் நுட்ப மையம் ,
தமிழ்நாடு வேளாண்மை பல்கலை கழகம்
கோயமபத்தூர்–641 003

தொலைபேசி–0422–6611278
FAX: 0422–6611478
மின் அஞ்சல்:
directorwtc@tnau.ac.in